# DEPOSITION OF WITNESS

## IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.I, POLLACHI

Case No. CC 97/2018

Prosecution Witness 4

| | | | |
|---|---|---|---|
| Name | : முருகன் | Caste | : |
| Father's Name/ Husband's Name | : த/பெ.பழனிச்சாமி | Calling | : |
| Village | : | Religion | : |
| Taluk | : | Age | : |

Solemnly affirmed in accordance with the provisions of the Oath Act, 1969 (Central Act 44 of 1969) on the 23rd day of May 2024.

(Accused present)

முதல் விசாரணை :

1. நான் தற்போது வடுகபாளையத்தில் குடியிருக்கிறேன். நான் கூலி வேலை செய்து வருகிறேன். அசா 1 எனது அண்ணன் மகள் ஆவார். ஆஜர் எதிரி எங்கள் ஊரை சேர்ந்தவர். எதிரியும் அசா 1ம் பழகிக்கொண்டிருந்ததாக அசா 1 என்னிடம் 2016 ம் ஆண்டு தெரிவித்தார். அசா 1 தான் 4 மாத கர்ப்பிணியாக இருப்பதாக என்னிடம் தெரிவித்தார்.

2. நானும் எனது உறவினர்களும் எதிரி மற்றும் அவரது பெற்றோர்களிடம் திருமணம் குறித்து பேச்சு வார்த்தை நடத்தினோம். ஆனால் எதிரி தன் குற்றத்தை ஒப்புக்கொள்ளவில்லை. அதனால் அசா 1 காவல் நிலையத்தில் புகார் கொடுத்தார். 2016 ம் ஆண்டு ஒருநாள் போலீசார் எதிரி வீட்டிற்கு வந்து வரைபடம் வரைந்தார்கள். பார்வை மகஜர் தயார் செய்தார்கள்.

3. தற்போது என்னிடம் காட்டப்படும் பார்வை மகஜரில் உள்ள 1வது சாட்சி கையொப்பம் என்னுடையதுதான். அந்த பார்வை மகஜர் **அசாஆ 2** ஆகும். இது சம்மந்தமாக போலீசார் என்னை விசாரித்தனர்.

எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை:

1. என் வீட்டிற்கு அசா 1ன் வீடு சுமார் 15 வீடுகள் தள்ளி உள்ளது. எதிரியும் அசா 1ம் காதலித்து வந்ததாக அசா 1 என்னிடம் கூறினார் என்று நான் கூறியுள்ள

பட்சத்தில் மேற்படி சங்கதியை எனது போலீசார் விசாரணையில் கூறியுள்ளேன். மேற்படி சங்கதியை போலீசாரிடம் நான் கூறவில்லை என்றாலும் முதல் முறையாக நீதிமன்றத்தில் வழக்கு வலு சேர்ப்பதற்காக கூறுகிறேன் என்றால் சரியல்ல.

2. அசா 1ன் வீட்டை சுற்றி நிறைய வீடுகள் உள்ளன என்றால் சரிதான். அசா 1ன் வீட்டை சுற்றிலும் உள்ள வீடுகளில் அவரது உறவினர்கள் மற்றும் வேறு நபர்கள் குடியிருக்கிறார்கள். அசா 1 காவல் நிலையத்தில் புகார் கொடுத்தபோது நானும் அவருடன் இருந்தேன். அச்சமயம் எதிரியும் அங்கிருந்தார். என் முன்னிலையில் அசா 1 புகாரை எழுதிக்கொடுத்தார். மேற்படி புகாரை பதிவு செய்து எதிரியை போலீசார் அன்றையதினமே கைது செய்தார்கள் என்றால் சரிதான்.

3. அசா 1ன் பெற்றோர் எதிரியிடம் அசா 1ஐ திருமணம் செய்துகொள்ள கேட்டார்கள் என்றும் அதை எதிரி மறுத்தால்தான் புகார் கொடுக்கப்பட்டது என்றும் எனது போலீசார் விசாரணையில் கூறியுள்ளேன் என்றால் சரிதான். எனக்கு எழுத படிக்கத் தெரியாது என்றால் சரிதான். போலீசார் கேட்டுக்கொண்டதால் கையொப்பமிட்டுக்கொடுத்தேன் என்றால் சரிதான்.

4. அசா 1ன் தந்தை எனது உறவினர் என்பதால் நான் சாட்சியமளிக்க வந்துள்ளேன் என்றால் சரிதான். அசா 1ம் எதிரியும் எந்த காலத்திலும் பழகவில்லை என்றால் சரியல்ல. எனது சாட்சியம் நிராகரிக்கப்பட வேண்டியது என்றால் சரியல்ல.

மறு விசாரணை: இல்லை.

Taken down by/before me in open Court, read over/interpreted to the witness in the presence of the accused/Accused's pleader and admitted by the witness to be correct.

(Sd/M.A.Suvedharanyan)
Judicial Magistrate No.I,
Pollachi.